/மின்னஞ்சலில்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க. எண்.038733 / அ4 / இ1 / 2023, நாள். 11.07.2023.

******

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – 2007 ஆண்டிற்கான சிறப்பு தேர்வில் Phase–II இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட பணியாளர்கள் 18.04.2023 நாளிட்ட மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பாணையை செயலாக்கம் செய்தது – திருத்திய முன்னுரிமைப் பட்டியல் அனுப்புதல் தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதம் எண்.5301/PSD–D1/2006 நாள்.20.06.2023
2. Orders dated 18/04/2023 of the Hon'ble Supreme Court of India in Contempt petition (Civil) Diary No(s) 6415/21 in SLP(C)No.2886./2016.

---

பார்வை (1)இல் காணும் 20.06.2023 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்துடன் 2007 ஆண்டிற்கான சிறப்பு தேர்வில் Phase–II தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் வழங்கப்பட்ட பணியாளர்களுக்கு பார்வை 2ல் காணும் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் திருத்திய முன்னுரிமைப் பட்டியல் பெறப்பட்டுள்ளது. அப்பட்டியல் இத்துடன் இணைத்து அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இப்பட்டியலில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் சார்பு செய்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு ஒப்புதலினை பெற்று கோப்பில் வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், மேற்காணும் முதுநிலைப் பட்டியலில் உள்ள பணியாளர்கள் எவரேனும் தற்போது இத்துறையில் பணிபுரியவில்லை எனில் அவர்களின் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்ட (இணைப்பு) பட்டியலில் பூர்த்தி செய்து 12.07.2023 அன்று 12.00 மணிக்குள் மின்னஞ்சலில் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

## இணைப்பு

| வ.எண். | திருத்தப்பட்ட முன்னுரிமை எண் | பெயர் | குறிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பணியில் சேரவில்லை | பணிதுறப்பு செய்த நாள் | பணி ஓய்வு /இறப்பு |
| | | | | | |

இச்செயல்முறைகள் பெற்றமைக்கு ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– திருத்திய முன்னுரிமைப்பட்டியல்.

பள்ளிக்கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர்
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

1. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
3. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
4. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
5. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்தபள்ளிக்கல்வி, சென்னை–6.
6. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.

} தகவலுக்காகப் பணிவுடன் அனுப்பப்படுகிறது

நகல்: இவ்வலுவலக அ2 பிரிவு மற்றும் அ3 பிரிவு
(இவ்வலுவலகம் சார்ந்த விவரங்களை அளிக்கும் பொருட்டு).